
அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

கண்ணோட்டம் .............................................2

சிலப்பதிகாரம்.................................................3

மக்கள் சக்தி இயக்கம் ................................... 6

கவிதைகள். .......................................................... 7

சிந்தனை 7 செயல் 4 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம். மார்ச் 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## இந்தியாவுக்கு ஏற்றது இருமொழிக் கொள்கையே!

இந்தியா பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடு. எந்தவொரு காலக் கட்டத்திலும் நாடு முழுவதும் ஒரே மொழியை மக்கள் பேசவில்லை. ஒவ்வொரு பகுதியில் வாழ்ந்த மக்களுக்கும் அவர்களுக்கென்று ஒரு தாய்மொழி இருந்தது. மொழி என்பது மக்களின் பண்பாட்டு நாகரிகத்தோடு தொடர்புடையது. மனிதனின் சிந்தனை ஆற்றலை வளர்த்து அவனை மேம்படுத்துவதில் தாய்மொழிக்கே பெரும் பங்குள்ளது. மொழி என்பதை வெறும் தொடர்பு கருவியாக மட்டுமே எண்ணிவிடக் கூடாது. இந்த அடிப்படை புரிதல் ஆட்சியாளர்களுக்கு கட்டாயம் இருந்தாக வேண்டும். அதுவும் இந்தியா போன்ற பல்வேறு மொழி பேசும் இனங்களைக் கொண்ட நாட்டை மேலாண்மை செய்யும் ஒன்றிய அரசுக்கு கண்டிப்பாக இந்தப் புரிதல் வேண்டும். அது இல்லாததன் விளைவு - மும்மொழிக் கொள்கை என்ற ஒன்றை வகுத்துக் கொண்டு கண்மூடித்தனமாக மாநிலங்கள் மீது திணிக்கின்றது ஒன்றிய அரசு.

ஒருவருக்கு தேவை எழுகின்ற போது, அவர் அந்த மொழியைக் கற்று கொள்ளலாம். இங்கு பள்ளி படிப்பை மட்டுமே படித்த ஒருவர் வணிகம் தொடர்பாக வட இந்தியா செல்லும் போது, அங்கு ஏற்பட்ட பழக்கத்தால் இந்தியில் பேசக் கற்று கொள்கிறார். இங்கு ஆண்டுக்கணக்கில் தொழில் செய்யும் வடவர் அழகாகத் தமிழ் பேசுகிறார். இவையெல்லாம் தேவை கருதி தானே ஏற்படக் கூடியவை. நிலைமை இப்படியிருக்க, எல்லோரும் இந்தியைக் கற்று கொள்ள வேண்டிய தேவை என்ன? ஏற்கனவே பாடச்சுமையால் மாணவர்கள் அவதிப்படும் போது, இன்னொரு சுமையை தேவையின்றி சுமக்க வேண்டுமா என்ன ? அப்படியே உங்களுக்கு இந்தி கற்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் தனியே கற்றுக் கொள்ளுங்கள், அதை யாரும் தடுக்கவில்லையே ?. மூன்றாவது மொழியை எல்லோரும் கற்க வேண்டும் என்று வலிந்து திணிக்காதீர்கள் என்றுதான் சொல்கிறோம்.அதனால் என்ன பயன் என்று கேட்கிறோம். வேலை வாய்ப்பு கிடைக்கும். என்கிறார்கள். அப்படியென்றால் இந்தி படித்தவர்கள் ஏன் வேலை தேடி இங்கு வருகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. தேசிய மொழி இந்தி என்று பெரிய பொய்யைச் சொல்கிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட 22 அலுவல் மொழிகளில் இந்தியும் ஒன்று அவ்வளவே!

ஒவ்வொரு மாநிலத்துக்கும் உரிய தாய்மொழியை அல்லது வட்டார மொழியை கல்விக் கூடங்களில் கற்றுத் தருவதோடு, மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியா கவும், உலக அளவிலான தொடர்பு மொழியாகவும் ஆங்கிலத்தைக் கற்றுத் தருவதுமே எல்லோருக்கும் நன்மை தருவதாகும்.; இந்தியா முழுவதும் சமச்சீரான அறிவு வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பேருதவி செய்வதாகும். இருமொழிக் கொள்கையைப் பின்பற்றியதால்தான் தமிழ்நாடு கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேறியுள்ளது. இந்தி மட்டுமே அறிந்து வைத்திருக்கும் வட இந்திய மாணவர்களுக்கு ஒன்றிய அரசு ஆங்கிலத்தைச் செறிவாகக் கற்றுத்தர முன்வர வேண்டும். இருமொழிக் கொள்கையை அனைத்து மாநிலங்களி லும் நடைமுறைப்படுத்துவது ஒன்றே சிக்கல் இல்லாதது. சிறப்பைத் தருவதோடு உலக அரங்கில் இந்தியாவை உயர்த்தக் கூடியது........ஆசிரியர்




## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

நம்மைப் பற்றிய நம் அபிப்பிராயத்தைவிட, நம்மைப் பற்றிய பிறர் அபிப்பிராயம் பெரிது என்று எப்போது கருதுகிறோமோ அன்றே நம்மை நம் மனத்தளவில் தாழ்த்திக் கொள்ள தொடங்கிவிட்டோம். பிறர் கூறும் பாராட்டையும், புகழ்ச்சியையும், ஆமோதிப்பையும் எதிர்பார்ப்பது, பிறரால் ஆட்டுவிக்கப்படும் பாதையின் முதல் படி. நம்மைப் பற்றி நமக்கே சந்தேகம் இருக்கிறது, தெளிவில்லை, பயம் உண்டு. இந்நிலையில் பிறர் ஆமோதிப்பிற்காக மனிதன் ஏங்குகிறான்.

தனி மனித வாழ்வில் மட்டுமல்ல இது பொது வாழ்விலும், சமுதாயம் தனது அங்கீகாரங்களையும், ஆமோதிப்பையும் தருவதன் மூலம் பல பழக்க வழக்கங்களை நம்மிடையே நிலைநாட்டி விடுகிறது. ஒரு மனிதன் மதத்திலோ, அரசியலிலோ அல்லது எந்தத் துறையிலோ தலைவனாகி விட்டால் அவன் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியுள்ளது. அப்பொழுது அவர்கள் என் கொள்கைகளைத் தாக்கு கிறார்களே ஒழிய என்னைத் தாக்கவில்லை என்று நாம் பிரித்து உணரக் கற்றுக்கொள்ள வேண்டும்.இல்லையென்றால் நாம் வீண் உணர்வுகளுக்கு ஆளாக நேரிடும். அதனால் மனஅமைதி கெடக்கூடும்.



.......நன்றி கங்கை புத்தகநிலையம்.

## கண்ணோட்டம் ...

முனைவர்.லெ.பாஸ்கர்

1960 - 70 களில் நம்நாட்டில் பெரும்பாலான குடும்பங்களில், அதாவது எளிய குடும்பங் களில் அன்றாடம் காணுகின்ற ஒரு காட்சி பற்றி நண்பர் ஒருவர் உருக்கமாக என்னிடம் பகிர்ந்து கொண்டதை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். அப்பொழுதெல்லாம் கூலி வேலைக்குச் சென்றால், முதலாளியின் வீட்டிலோ, அலுவலகத்திலோ காத்துக் கிடந்து, ஊதியத்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வருவதற்கு இரவு 8 மணியாகிவிடும்.

கணவன் எப்பொழுது வருவார் என்று மனைவி எதிர்பார்த்துக் காத்திருப்பாள். அம்மா எப்போது சோறு தருவாள் என்று பிள்ளைகள் அவள் முகத்தைப் பார்த்திருக்கும். நண்பகல் பொங்கியச் சோறு, இரவு பசியாற குறைவாகவே இருக்கும். வேலைக்குச் சென்றுவிட்டு அதிகப் பசியோடு வரும் தன் கணவனுக்கு வேண்டிய உணவை எடுத்து தனியே வைத்துவிட்டு, இருக்கின்ற உணவைப் பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு, காத்திருப்பாள் கணவன் வருகைக்காக

கணவன் வந்தவுடன், அன்றைய வேலையைப் பற்றிய சிறு உரையாடலுக்குப் பிறகு, அவன் குளித்துவிட்டு வந்தவுடன் மனைவி அவனுக்கு உணவு பரிமாறுவாள். அவனோ உணவைப் பிசைந்து சிறு உருண்டைகளாக உருட்டி, அப்பொழுதுதான் தூங்கச் சென்றிருக்கும் குழந்தைகளை எழுப்பி ஆளுக்கு ஒரு வாய் கொடுத்துவிட்டு, தானும் முழுமையாகச் சாப்பிட்டு பசியாறாமல், போதும், பசிக்கவில்லை என்று தட்டிலே கொஞ்சம் உணவை மீதம் வைத்துவிடுவான். மனைவி சாப்பிடுவதற்காக!. ஆம்! அவனுக்குத் தெரியும், அவன் நன்றாக சாப்பிட வேண்டும் என்பதற்காக அவள் சாப்பிட்டிருக்க மாட்டாள் என்பது!.இதுதான் இல்லறத்தின் உயர்ந்த கண்ணோட்டம்! என்பது நண்பரின் கூற்று.



# சிலப்பதிகாரம் காவியம்

**மதுரைக் காண்டம். வாழ்வில் மீண்டும் மலர்ச்சியைக் காண மதுரை மாநகருக்குச் சென்ற கோவலன் கண்ணகி இருவரின் முடிவும், மதுரையின் அழிவும்.**

**மரு.த.இராசலிங்கம்.**

### 247. உணர்விழந்தாள் கண்ணகி

இறந்துவிட்டான் கோவலன் என்று
இடியெனவே இறங்கிய செய்தி
பறந்துவந்து நெஞ்சினில் மோதும்
பாறையென தாக்கிய தாலே
சிறகொடிந்த பறவையின் கால்கள்
சிதைந்துதான் போனது போலே
உறவறுந்த கண்ணகி யாளும்
உணர்வற்று தரையினில் வீழ்ந்தாள்!

### 248. ஆயர் மகளிர் ஆறுதல்

பூங்கொடியும் புழுதியில் புதைந்து
புரண்டதுபோல் கண்ணகி கோலம்
அங்கிருந்த பெண்களும் கண்டு
அரவணைத்தே அவளையும் தூக்கி
பொங்கிவரும் கண்களும் துடைத்து
பொறுப்புடனே ஆறுதல் கூற
ஏங்கியவள் மயங்கியே கேட்டாள்
“என்கணவன் கள்வனோ?” என்று

### 249. அறத்தின் குரல் ஒலித்தது

தீயதான நிமித்தம் தோன்ற
தெருவெங்கும் குரவைக் கூத்து
மாயோனைத் தொழுது வேண்டி
மனமொத்த ஆயர் பெண்டிர்

காயமது மனதைக் கொன்ற
கண்ணகியின் அருகில் வந்து
ஆயமென சூழ்ந்தி ருக்க
ஆறுதலும் மொழிந்தி ருக்க,

“தூயவனே என்கண் ணாளன்
தோழியரே கேளீர்! கேளீர்!”
வாயதுவும் அரற்றி நிற்க
வருந்தியவள் உரைத்த தோடு

வியனுலகில் நடப்ப தெல்லாம்
விண்நின்று நேராய் காணும்
காய்கதிர்பொன் செல்வன் நீசொல்!
கள்வனோஎன் கணவன்? என்று

சாயப்போ கும்மேற் திசையின்
சன்னமான கதிரோன் தன்னை
நாயகனின் சாட்சி யாக
நங்கையவள் குமுறிக் கேட்க,

உயர்வான பெண்ணே கேளாய்!
உன்கணவன் கள்வ னல்லன்.
மயக்கமது தெளிவாய் ! நன்றே,
மனச்சான்றாய் குரலொன் (றொ)லிக்க.......

### 250. எரிமலையானாள் கண்ணகி

கள்வனல்லன் உன்கணவன் என்று காற்றில்
கலந்துவந்து ஒலித்தகுரல் அங்கு கேட்க,
உள்ளத்தில் ஒருவிதமாய் ஐயம் கொண்ட
ஊருக்கு உண்மைதனை உணர்த்தி நிற்க,
பள்ளத்தில் பாய்ந்தோடும் நீரும் மெல்ல
பரந்துகாணும் சமவெளிக்கு வந்தாற் போலும்
எள்ளல்தான் இழிவும்தான் விலகி டத்தான்
எரிமலையாய்எழுந்துநின்றாள்கண்ணகிஅங்கே!

### 251. சிலம்பைக் கையில் எடுத்தாள்

விருட்டென்று வீட்டுக்குள் சென்ற வள்தான்
விளக்கொன்றை கையாலே ஏற்றி விட்டு
இருட்டொன்று இருவரையும் ஒன்றி ணைத்த
இடமதையும் ஒருகணமே நினைத்து விட்டு
பொருட்டாக பொதிந்தேதான் வைத்தி ருந்த
புதுஒற்றைச் சிலம்புதனை எடுத்துக் கொண்டு
உருளுகின்ற விழிகண்டு ஊரார் அஞ்ச,
உக்கிரமாய் வெறித்தபடி வெளியே வந்தாள்!

**252. கண்ணகி சீற்றம்**

அறனின்றி அரசனவன் இழைத்த குற்றம்
அறிந்தும்நான் ஆமையென அடங்கு வேனோ?
இறந்துவிட்ட என்கணவன் உற்ற பழியை
எடுத்துரைக்கா ஊமையென முடங்குவேனோ?
உறவறுந்த பெண்களைப்போல் துயரு முற்று
ஊரறிய உண்மையுரைக்க நடுங்கு வேனோ?
விறகிலிட்ட நெருப்பெனவே நெஞ்சம் வேக
வேதனையில் துடிதுடித்து ஒடுங்கு வேனோ?

சீற்றமுடன் கண்ணகியும் உரத்துப் பேச
சிலையாகி நின்றனரே ஆயர் மக்கள்
போற்றுகின்ற மன்னனையே கேள்வி கேட்க
புறப்பட்ட இவள்தானோ அறத்தின் தெய்வம்?
மாற்றமொன்று மதுரைக்கு வருதல் உண்டு
மனமதிலே அச்சம்தான் புகுந்து கொள்ள
சாற்றுகின்ற குற்றமெல்லாம் சரியே என்று
சஞ்சலம்தான் மேலோங்க சமைந்தே நின்றார்

**253. கொலையுண்ட கோவலனைக் காணச் செல்லல்.**

ஒற்றைச் சிலம்பை கையில் ஏந்தி
ஓட்டம் நடையும் ஒன்றாய் ஆக
கற்றைக் குழலும் காற்றில் ஆட,
கண்கள் எங்கோ வெறிப்ப தாக,
உற்றக் கணவன் உயிரும் போக
உடலாய் கிடக்கும் இடமும் தேடி
பற்ற வைக்கும் சினத்தீ வெம்மை
பார்ப்போர் நெஞ்சம் பதறச் சென்றாள்.

சாலையின் ஓரம் நின்ற மக்கள்
சற்றே வியந்து பார்ப்ப தாக
மாலையின் பொழுதில் மலரும் பூக்கள்
மலர கொஞ்சம் மறுப்ப தாக
வேளையில் கூவும் புள்ளும் அங்கே
வெட்கித் தன்னுள் வெறுப்ப தாக
ஆலையில் இட்ட கரும்பாய் அந்தோ
அவளும் தெருவில் ஓடி னாளே !

.............தொடரும்

**குறிப்பு**

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் காப்பியத்தை, அதன் உட்கருவை , கதையை மாற்றாமல், சில பகுதிகளை வேண்டாம் என்று விடுவித்தும், கதையின் சீரான போக்கை கருத்தில் கொண்டு சில இடங்களை நிரவல் செய்தும் எனது நடையில், எளிய மரபுக்கவிதைகளாக எழுதி வருகிறேன் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
## கலித்தொகை --- பாலைக்கலி

மனைவியைக் கணவன் எவ்வாறு பேண வேண்டும் என்பதனை, காட்டில் காணுகின்ற காட்சிகளை நம் கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்தி, உவமையழகுடன் எடுத்துக் காட்டுகிறது பாலைக்கலி. காட்டிலே கோடைகாலத்தில் நீர்நிலையைக் காண்பதே அரிது. அப்படியே நீர்நிலை இருந்தாலும், அதிலே சிறிதளவு நீர்தான் இருக்கும். அந்த நீரையும், துடி போன்ற அதாவது உடுக்கை போன்ற பாதங்களை உடைய யானைக்கன்று கலக்கி விடுமாம். அவ்வாறு கலங்கிய நீரை, தெளிந்தவுடன் ஆண்யானை எனப்படும் களிறு தன் வேட்கையைத் தீர்க்க பருகாமல், பெண்யானையான பிடியானைக்கு முதலில் நீரை ஊட்டிவிட்டு, எஞ்சிக் கிடப்பதை பின்னர் பருகுமாம். ஆண்யானையின் அந்த அன்பின் வெளிப்பாட்டை இவ்வாறு அழகுடன் எடுத்துக்காட்டுகிறது பாலைக்கலி

**துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்**
**பிடி ஊட்டி பின் உண்ணும் களிறு.**

அவ்வாறு மற்றுமொரு காட்சி காட்டிலே, தன்பால் அன்பு கொண்ட பெண்புறா, வெம்மையைத் தாங்க முடியாமல் வருந்திக் கொண்டிருக்க, ஆண்புறா தன் மென்மையான இறகுகளால் வீசிய படி அதன் வருத்தத்தைப் போக்குமாம். அந்த பேரன்பை இவ்வாறு கூறுகிறது பாலைக்கலி

**அன்பு கொள் மடப் பெடை அசைஇய வருத்தத்தை**
**மென் சிறகரால் ஆற்றும் புறவு.**

அந்தக் காட்டிலே மரங்கள் வாடிப்போனதால், இனிமைதரும் நிழல் இல்லை. அதனால் வருந்தி தவித்த பெண்மான் மடப்பிணைக்குத் தன் நிழலையே கொடுத்து பேணுமாம் ஆண்மான் கலை. எப்படிப்பட்ட உவமையழகு பாருங்கள்!

**இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்**
**தன் நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை**

காட்டில் காணுகின்ற காட்சிகளையே உவமையழகுடன் கோர்த்து, கணவன் மனைவிக்கிடையே என்றும் பிரிவு வராத வண்ணம், மனைவியைப் பேணுதல் என்ற இல்லறத்தின் உயரிய பண்பை நம் உள்ளம் நெகிழப் பாடுகிறது பாலைக்கலி.
சங்க இலக்கியம், இலக்கிய நயத்துக்காக மட்டும் படைக்கப்படவில்லை. மனித நாகரிகத்தையும், பண்பாட்டையும் விளங்கச் செய்வது அது.

உவமையழகு தொடரும்.....

மரு.த.இராசலிங்கம்





பெரம்பலூர் மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக மாவட்டச் செயலாளர் சிவக்குமார் தலைமையில் விளாமுத்தூர் கிராமத்தில் வீடு வீடாகச் சென்று மது மற்றும் போதை ஒழிப்பு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மாநில துணைத்தலைவர் முனைவர். க.பெரியசாமி, மாவட்டப் பொருளாளர் வெங்கடாசலம் உட்பட இயக்கப் பண்பாளர்கள் கலந்து கொண்டனர். நாள்..23.02.2025






தஞ்சை மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக உழவர் சந்தை அருகே 02.03.2025 அன்று மாவட்டச் செயலாளர் பேராசிரியர் முருகானந்தம் தலைமையில் மது மற்றும் போதை ஒழிப்பு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்டப் பொருளாளர் ஜோசப் அமல்ராஜ், பேராசிரியர் மணிவண்ணன் உட்பட இயக்கப் பண்பாளர்கள் கலந்து கொண்டு , சந்தைக்கு வருவோரிடம் மதுவிலக்கு, போதை ஒழிப்பு குறித்து பரப்புரை செய்தனர்.

- வளமான வாழ்வுக்கும், உயர்வுக்கும் முழுமையான மதுவிலக்கை, போதைப்பொருள் ஒழிப்பை ஆதரிப்பீர்!
- நல்ல மதுவோ, கள்ள மதுவோ இரண்டுமே உடலுக்கும், உலகத்துக்கும் கேடுதான்.
- நல்ல மது என்று அருந்தினால் அது மெல்ல, மெல்லக் கொல்லும். கள்ள மதுவோ உடனே கொல்லும்!
- இயற்கைக்கு முரணானது போதை!
- இல்லறத்துக்கு எதிரானது போதை !
- பழி, பாவங்களைச் செய்யத் தூண்டும் மது! நண்பனையும் பகைக்கும் அது!

- உடலையும் கெடுத்து, உயிரையும் பறித்து, குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைக்கும் மதுவை நாடலாமா?
- சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தும் மது மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து விடுபடுவதோடு, வருங்காலச் சந்ததியினரைக் காப்பாற்ற, மதுவாசனை இந்த மண்ணின் வாசனை யாகாமல் தடுக்க,

பூரண மதுவிலக்கு, போதை ஒழிப்பு பரப்புரையை இன்றே தொடங்குவோம்!

## மனதின் உயரம்...

மேலே என்பதால்
மேகங்கள்
மேதாவிகளன்று !

கீழே என்பதால்
கடல் முத்து
உப் பன்று !

நிலம் நோக்கும்
தலைகுனிவுகள்
அவமானமன்று !

வான்நோக்கும்
நிமிர்வுகள்
சிறகடிப்புகள் !

தேய்பிறையெனில்
அமாவாசை !

வளர்பிறையெனில்
பௌர்ணமி !

அறிந்தோர்
அன்பர் !

அறியாதோர்
அந்நியர் !

மனதின் உயரம்
மலையாம் !

வாழ்வின் உயரம்
சிகரம் !

**கவிஞர்.கலியுகன் கோபி**
**சென்னை**

## அச்சம் விலக்கிடு!

பயமெனும் பாவியை
பாதாளம் தள்ளிவிடு;
முயலென ஓடியே
முன்னேற்றம் கண்டிடு!

தடைகள் தகர்த்தெறிந்து
மடைகள் உடைத்திடு;
விடைகள் கண்டே
விளக்காய் மிளிர்ந்திடு!

துரத்தியே ஓட்டும்
துன்பம் விலக்கிடு;
வரமாய் எண்ணியே
வாழ்வில் முயன்றிடு!

எண்ணத்தில் உறுதி
திண்ணமாய் எடுத்திடு;
வண்ணச் சிறகடித்து
விண்ணில் பறந்திடு!

அன்பெனும் விளக்கை
அணையாது காத்திடு;
உன்மனத் துணிவால்
உயரத்தை அடைந்திடு!

எல்லோரும் இன்புறவே
இயன்றளவு உதவிடு;
அல்லல் அறுத்திடவே
அச்சத்தை விலக்கிடு!

**கவிஞர்.தேவிகா பொன்னம்பலம்**
**தூத்துக்குடி**